[1972 ஆகஸ்ட் 21

*234. வினா—திரு. ந. தருமலிங்கம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னைக்கும், கள்ளக்குறிச்சிக்கும் இடையே திண்டிவனம், செஞ்சி, திருவண்ணாமலை, திருக்கோயிலூர், கடம்பூர், சங்கராபுரம் வழியாக அரசு விரைவுப் பேருந்து விடுவதற்கான செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், எப்பொழுது முதல் விடப்படும்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. ந. தருமலிங்கம் : தலைவரவர்களே, இந்தப் பேருந்து வழித்தடத்தில் தனியார் பஸ்கள் ஓடிக்கொண்டிருக்கின்றன. இனிமேலாவது அரசாங்கம் விடுவதற்கு முயற்சி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, கள்ளக்குறிச்சியிலிருந்து சென்னைக்கு விரைவுப் பேருந்து விடலாம் என்றுதான் அரசாங்கம் யோசனை செய்தது. ஆனால் அண்மைக்காலத்தில் 150 மைல்களுக்கு உள்ளான பகுதிகளிலிருந்து சாதாரண பேருந்துகளில் செல்வதையே விரும்புகிறார்கள், விரைவுப் பேருந்துகளில் பயணக் கட்டணம் அதிகமாக இருக்கிறது என்ற உணர்வு இருப்பதால், கூடியவரையில் நீண்ட தூரங்களுக்கே விரைவுப் பேருந்துகள் பயன்படுத்தப்படுகிறது. ஆகவே, இப்பொழுது தனியார் விடுகிறார்களா என்பதைப்பற்றிய தகவல் என்னிடத்தில் இல்லை. இருந்தாலும் சாதாரண லிமிடெட் ஸ்டாப் சர்வீஸ் விடலாம் என்ற யோசனை அரசாங்கத்தின் கவனத்தில் இருக்கிறது.

திரு. எம். தேவராசன் : உதகையில் இருந்து பங்களூருக்கு பஸ்விட கோரிக்கை இருந்தது. அமைச்சர் அவர்கள் கூட பெங்களூரில் இதைப் பற்றிப் பேசியிருப்பதாகத் தெரிகிறது. இந்த பஸ் செர்விஸ் உடனடியாகத் துவங்கப்படுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : நமக்கு பஸ் வண்டிகள் கிடைத்தவுடன் அந்த செர்வீஸ்கள் துவங்கப்படும்.